




# சக்கர வியூகம்

SAKKRA VIYUGAM

புலனாய்வு நாளிதழ்








Website: www.sakkraviyugam.com PRGI:TNTAM/25/A1018 Email: sakkraviyugam@gmail.com

VOLUME : 01 ISSUE: 212 25.1.2026 SUNDAY THAI : 11 PRICE : RS.5/-

மலர் : 01 இதழ் : 212 25.1.2026 ஞாயிற்றுக்கிழமை தை : 11 விலை : ரூ.5/–


## தேசபக்தி குறித்து எங்களுக்கு யாரும்

# “பாடம் எடுக்கத் தேவையில்லை”

## குடியரசு தின விழாவை ஒட்டி சென்னையில் 5 அடுக்கு பாதுகாப்பு: ட்ரோன்கள் பறக்கத் தடை

சென்னை: ஜன.25-

குடியரசு தின விழாவை ஒட்டி சென்னையில் 5 அடுக்கு பாதுகாப்புக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இது தொடர்பாக சென்னை காவல்துறை வெளியிட்டுள்ள அறிக்கையில், “வருகிற 26.01.2026 அன்று இந்திய குடியரசு தினத்தை முன்னிட்டு, தமிழக ஆளுநர் சென்னை, காமராஜர் சாலை வாலாஜா சாலை சந்திப்பில் உள்ள மெரினா உழைப்பாளர் சிலை அருகே தேசிய கொடியேற்றி சிறப்பிக்க உள்ளார்.

இதனையொட்டி சென்னை, காமராஜர் சாலை மற்றும் அதை சுற்றியுள்ள பகுதிகளில் 5 அடுக்கு பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது.

சென்னை பெருநகர காவல் ஆணையாளர் உத்தரவின் பேரில், காவல் கூடுதல் ஆணையாளர்கள் அறிவுரையின்பேரில், காவல் இணை ஆணையாளர்களின் நேரடி மேற்பார்வையில், துணை ஆணையாளர்கள், உதவி ஆணையாளர்கள், காவல் ஆய்வாளர்கள் மற்றும் காவலர்கள் என மொத்தம் 7,500 காவல் அதிகாரிகள் மற்றும் ஆளிநர்கள் மூலம் சிறப்பு பாதுகாப்பு பணிகள் மேற்கொள்ள ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது.

மேலும், சென்னை பெருநகர காவல் சரக எல்லைக்குட்பட்ட சென்னை விமான நிலையம், ரயில் நிலையங்கள், பேருந்து முனையங்கள் மற்றும் பேருந்து நிலையங்கள், வணிக வளாகங்கள், கடற்கரை பகுதிகள் மற்றும் அனைத்து வழிபாட்டுத் தலங்களிலும் கூடுதலாக போலீசார் நியமிக்கப்பட்டு பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது.

இது தவிர சென்னையிலுள்ள அனைத்து தங்கும் விடுதிகள் மற்றும் ஓட்டல்களில் சோதனைகள் மேற்கொள்ளப்பட்டு, சந்தேக நபர்களின் நடமாட்டம் குறித்து ஏதேனும் தகவல் இருந்தால் காவல்துறைக்கு தெரிவிக்கும்படி அறிவுறுத்தப்பட்டுள்ளது.

சென்னை பெருநகர் முழுவதும் அந்தந்த காவல் சரக எல்லைக்குட்பட்ட பகுதிகளில் சுற்றுக்காவல் ரோந்து வாகனங்கள் மூலம் ரோந்து பணிகள் தீவிரப்படுத்தப்பட்டு, நகரின் முக்கிய நுழைவு பகுதிகளான மாதவரம், திருவொற்றியூர், மதுரவாயல், மீனம்பாக்கம், துரைப்பாக்கம், நீலாங்கரை உள்ளிட்ட இடங்களில் சோதனை சாவடிகள் அமைத்து காவல் துறையினர் மூலம் வாகனத் தணிக்கைகளும், மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

மக்கள் அதிகம் கூடும் இடங்களான மீனம்பாக்கம் விமான நிலையம், சென்னை சென்ட்ரல், எழும்பூர் ரயில் நிலையங்கள், கோயம்பேடு, மாதவரம் பேருந்து முனையங்கள் உட்பட அனைத்து முக்கிய இடங்களிலும், சென்னை பாதுகாப்பு பிரிவின் (SCP), காவல் அதிகாரிகள் தலைமையில், காவல் ஆளிநர்கள், வெடிகுண்டு கண்டுபிடித்தல் மற்றும் செயலிழத்தல் பிரிவு (BDDS), மோப்பநாய் பிரிவு மற்றும் மெரினா கடற்கரை பகுதியில் கடலோர பாதுகாப்பு படை (CSG) பிரிவினருடன் இணைந்து நாசவேலை தடுப்பு சோதனைகளும் (Anti Sabotage Check) மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

மேலும், குடியரசு தினத்தை முன்னிட்டு 25.01.2026 மற்றும் 26.01.2026 ஆகிய 2 நாட்கள் (அரசு விழாக்கள் தவிர) i) மெரினா கடற்கரையில் அமைந்துள்ள உழைப்பாளர் சிலை மற்றும் சுற்றியுள்ள பகுதிகள், ii) ராஜ்பவன் முதல் மெரினா கடற்கரை வரை மற்றும் வீவீவீ) முதல்வர் இல்லத்தில் இருந்து மெரினா கடற்கரை வரையில் செல்லும் வழித்தடங்கள் ‘‘சிவப்பு மண்டலமாக‘‘ (RED ZONE) அறிவிக்கப்பட்டு அந்த பகுதிகளில் Remotely Piloted Aircraft Systems (RPAS), டிரோன் மற்றும் எந்தவிதமான பொருட்களும் பறக்கவிட தடை விதிக்கப்படுகிறது.

தடையை மீறி ட்ரோன்கள் மற்றும் இதர ஆளில்லா வான்வழி பொருட்கள் பறக்கவிடும் நபர்கள் மீது சட்டப்படி கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என சென்னை பெருநகர காவல்துறை சார்பாக எச்சரிக்கப்படுகின்றது. சென்னை பெருநகர காவல் துறையினருக்கு பொதுமக்கள் ஒத்துழைப்பு நல்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.” எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## ஆளுநர் செயல்பாடு குறித்து பேரவையில் ஸ்டாலின் விளக்கம்!



சென்னை: ஜன.25-

“தேசபக்தி குறித்து யாரும் எங்களுக்கு பாடம் எடுக்கும் நிலையில் இல்லை. தேசபக்தி பாடம் நடத்தக்கூடிய அளவுக்கு இந்தத் தேசத்திற்காகப் போராடியவர்களும் அவர்கள் இல்லை. ஜனநாயகத் தேசத்தில் அரசியலமைப்பு மாண்பை அதிகாரத் தன்மையோடு மாற்ற நினைப்பவர்கள் தான் இன்றைய காலகட்டத்தில் தேச விரோதிகள்.” என்று சட்டப்பேரவையில் ஆளுநரின் செயல்பாடு குறித்து விளக்கமளித்துப் பேசிய முதல்வர் ஸ்டாலின் தெரிவித்தார்.

தமிழக சட்டப்பேரவை கூட்டத்தொடர் ஜன.20ம் தேதி கூடியது. அன்றைய தினம் ஆளுநர் உரையை வாசிக்காமல் புறக்கணித்துச் சென்றார். இது சர்ச்சையானது.

இந்நிலையில் ஆளுநரின் செயல்பாடு குறித்து இன்று (சனிக்கிழமை) முதல்வர் ஸ்டாலின் சட்டப்பேரவையில் காட்டமான வாதங்களை முன்வைத்தார்.

சட்டப்பேரவையில் முதல்வர் ஸ்டாலின் பேசியதாவது: தமிழகத்தின் நலனுக்காக செயல்பட வேண்டிய ஆளுநர், தமிழக மக்களுக்காகப் பாடுபடும் எங்களுக்கு எதிராகத் தொடர்ந்து செயல்படுவது மிகுந்த வேதனையை அளிக்கிறது. ஆளுநர் தாம் படிக்க வேண்டிய உரையைப் படிக்காமல் செல்வது வேடிக்கையாக உள்ளது.

இதன்மூலம், அவர் வகிக்கும் பதவியையே அவர் அவமானப்படுத்துகிறார். ஒரு பொறுப்புமிக்க பதவியில் இருந்து கொண்டு அதை கேவலப்படுத்துகிறர். கடந்த மூன்றாண்டுகளாக நமது ஆளுநர் ஒரே காரணத்தைத் திரும்பத் திரும்பச் சொல்லிக்கொண்டு, மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசு தயாரித்துக் கொடுத்த உரையைப் படிக்காமல் வெளியேறுவது என்பது மக்களாட்சிக்கு விடப்பட்ட சவாலாகவே இந்த பேரவை கருத வேண்டி உள்ளது.

இந்த அரசு கோடிக்கணக்கான மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டது. கோடிக்கணக்கான மக்களுடைய விருப்பங்களுக்கு ஏற்ற வகையில் செயல்படக்கூடிய அரசு இது.

ஆளுநர் உரை தொடங்கும்போது தமிழ்த்தாய் வாழ்த்து பாடுவதும், முடிவடையும்போது நாட்டுப்பண் பாடுவதும் தமிழக சட்டப்பேரவையின் மரபு.

முதலிலேயே நாட்டுப்பண் பாடவில்லை என்பதைத் திரும்பத் திரும்பக் குற்றச்சாட்டாக அவர் கூறி வருகிறார். இந்த நாட்டின் மீதும், நாட்டுப்பண் மீதும் அளவற்ற பெருமதிப்பையும் மரியாதையும் கொண்டுள்ளவர்கள் நாம்.

தேசிய ஒருமைப்பாட்டிலும் நாட்டுப் பற்றிலும் யாருக்கும் குறைந்தவர்கள் அல்ல நாங்கள் என்பதை ஆளுநருக்கு அழுத்தமாகவும் திருத்தமாகவும் நான் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். யாரும் எங்களுக்கு தேசபக்தி குறித்து பாடம் எடுக்கும் நிலையில் இல்லை. தேசபக்தி பாடம் நடத்தக்கூடிய அளவிற்கு இந்தத் தேசத்திற்காகப் போராடியவர்களும் அவர்கள் இல்லை. ஜனநாயகத் தேசத்தில் அரசியலமைப்பு மாண்பை அதிகாரத் தன்மையோடு மாற்ற நினைப்பவர்கள் தான் இன்றைய காலகட்டத்தில் தேச விரோதிகள். அவர்கள் யார் என்பது நாட்டு மக்களுக்கு நன்றாகத் தெரியும்.

ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்திற்குப் பதிலளிக்க வேண்டிய நான், இன்று ஆளுநருக்கு விளக்கம் அளித்துப் பேச வேண்டிய நிலையில் இருக்கிறேன்.

அண்ணா, கலைஞர், எம்ஜிஆர், ஜெயலலிதா காலத்தில் இருந்த ஆளுநர்கள் கூட இப்படி செயல்படவில்லை. பல முரண்பாடுகள் இதயத்தில் இருந்தாலும், அதை ரணமாக்கும் வகையில் செயல்படவில்லை. அந்த அளவுக்கு அதிகமான சோதனைகளை எதிர்கொண்டவனாக நான் இன்று நின்று கொண்டிருக்கிறேன்.

என்னைப் பொறுத்தவரை சோதனைகள் எனக்குப் புதிதல்ல. சோதனைகளை வென்று வளர்ந்தவன் நான். என்னைச் சீண்டிப் பார்ப்பவர்கள் மனதிற்குள் மகிழ்ச்சி அடையலாம்; தவிர, அது என்னை எதுவும் செய்ய முடியாது. இவ்வாறு முதல்வர் ஸ்டாலின் பேசினார்.








## பெற்றோர்கள் பிள்ளைகளை கண்காணித்தால் போதும் மாணவர்கள் உயர்நிலையை அடைவார்கள் : நீதியரசர் திரிவேனி பேச்சு

சின்னாளபட்டி, ஜன.25

திண்டுக்கல் மாவட்டம், சின்னாளபட்டி பைபாஸ் சாலையில் அமைந்துள்ளது சேரன் வித்யாலயா மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி. இப்;பள்ளியின் 25வது வெள்ளிவிழா ஆண்டு விழாவை முன்னிட்டு பல்வேறு கலைநிகழ்ச்சிகள் நடைபெற்றது. சிறப்பு விருந்தினராக கலந்து கொண்ட மெர்ஸி பவுண்டேசன் தலைவர் அருள்மெர்ஸி செந்தில்குமார் மற்றும் திண்டுக்கல் மாவட்ட சட்டப்பணிகள் ஆணைக்குழு செயலாளர் நீதியரசர் திரிவேனி ஆகியோர் பள்ளியின் 25 வது வெள்ளிவிழா ஆண்டு பதாகையை வெளியிட்டனர். அதன் பின்னர் நடைபெற்ற நிகழ்ச்சிக்கு பள்ளி தாளாளரும் நிர்வாக அறங்காவலருமான எம்.சிவக்குமார் தலைமை தாங்கினார். சேரன் கல்வி அறக்கட்டளையின் பொருளாளரும், பள்ளியின் முதல்வருமான என்.திலகம் வரவேற்றுப் பேசினார். பள்ளி மேலாளரும் அறங்காவலருமான ஓ.பி.பாரதிராஜா, அறங்காவலர்கள் ஜெ.ஆல்பிரட்எங், அபிஷேக், சித்தையங்கோட்டை சேரன் குளோபல் மெட்ரிக் மேல்நிலைப் பள்ளி நிர்வாக அலுவலர் அஸ்விதா அபிஷேக் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

விழாவில் மெர்ஸி செந்தில்குமார் பேசும்போது, 25 வருடங்களுக்கு முன்பு சின்னாளபட்டியில் சேரன் வித்யாலயா என்ற கல்வி நிறுவனத்தை தொடங்கி இன்று ஆலமரம்போல் வளர்த்து சிறு வயது முதல் உங்கள் பிள்ளைகளை ஆரோக்கியமான மனநிலைக்கு கொண்டுவந்தால் போதும். உங்கள் பிள்ளைகள் உங்களுக்கு பெருமை தேடித்தருவார்கள் என்றார்.

விழாவில் ஆத்தூர் ஒன்றிய முன்னாள் சி.பி.எம். செயலாளர் தோழர் வி.கே.முருகன், முன்னாள் பேரூர் கழக திமுக செயலாளர் மோகன்ராஜ், தேவாங்கர் பள்ளி ஆசிரியர் காசிராஜன், உடற்கல்வி ஆசிரியர் மகாதேவன், சேரன் குளோபல் பள்ளி முதல்வர் மகாலெட்சுமி, துணை முதல்வர் சரண்யா, பேரூராட்சி துணைத்தலைவர் ஆனந்தி பாரதிராஜா, ராஜன் உள்விளையாட்டு அரங்கம் நிறுவனர் மாஸ்டர் எம்.பிரேம்நாத், பள்ளி உடற்கல்வி ஆசிரியர்கள் என்.அசோக்குமார், செந்தில்குமார், ஆரோக்கிய ரஞ் சனி மற்றும் பள்ளி அலுவலக பணியாளர்கள் மகேஸ்வரி, பிரியா, பள்ளி ஆசிரியர்கள் மாணவர்கள் உட்பட பலர் கலந்துகொண்டனர்.

# ம.பி.யில் வசந்த பஞ்சமி பூஜை பலத்த பாதுகாப்புடன் தொடக்கம்

தார், ஜன.25-

மத்திய பிரதேச மாநிலம் தார் மாவட்டத்தில் உள்ள சர்ச்சைக்குரிய 11ம் நூற்றாண்டு போஜ் சாலாகமல் மௌலா மசூதி வளாகத்தில், பலத்த பாதுகாப்புக்கு மத்தியில் வசந்த பஞ்சமி பூஜை நேற்று அதிகாலை தொடங்கியது.



இந்த ஆண்டு வசந்த பஞ்சமி விழா வெள்ளிக்கிழமையான நேற்று வந்ததால், அதே வளாகத்தில் வழிபாடு நடத்த இந்து மற்றும் முஸ்லிம் இரு தரப்பினரும் உரிமை கோரினர். இரு சமூகத்தினரிடையே மோதல் ஏற்படுவதைத் தவிர்க்க, குறிப்பிட்ட நேர ஒதுக்கீடு முறையை உச்ச நீதிமன்றம் வியாழக்கிழமை அறிவித்தது.

அதன்படி, இந்து சமூகத்தினர் சூரிய உதயம் முதல் சூரிய அஸ்தமனம் வரை பூஜைகள் செய்ய அனுமதி வழங்கப்பட்டது. முஸ்லிம் சமூகத்தினர் மதியம் 1 மணி முதல் 3 மணி வரை தொழுகை நடத்த அனுமதிக்கப்பட்டது. முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக போலீஸார் மற்றும் துணை ராணுவப் படையினர் பாதுகாப்புப் பணியில் ஈடுபடுத்தப்பட்டனர்.



# “எங்களை நட்டாற்றில் விட்டுவிட்டு போய்விட்டார்” வைத்திலிங்கம் ஆதரவாளர்கள் ஆதங்கம்

தஞ்சாவூர், ஜன.25-

முன்னாள் அமைச்சர் வைத்திலிங்கம் தங்களிடம் எந்த கருத்தும் கேட்காமல், நட்டாற்றில் விட்டுவிட்டு திமுகவில் இணைந்ததால், அதிமுகவில் இணைந்துவிட்டதாக அவரது ஆதரவாளர்கள் தெரிவித்தனர்.

அதிமுக முன்னாள் அமைச்சரும், ஓபிஎஸ் ஆதரவாளராக இருந்தவருமான ஆர்.வைத்திலிங்கம் அண்மையில் முதல்வர் மு.க.ஸ்டாலின் முன்னிலையில் திமுகவில் இணைந்தார். ஆனால், அவரது ஆதரவாளர்களாக இருந்த தஞ்சாவூர் மாநகராட்சி முன்னாள் கவுன்சிலர்கள் சாமிநாதன், சண்முகபிரபு, ராஜா, செல்லதுரை உள்ளிட்ட 30 பேர் திமுகவுக்கு செல்ல விருப்பம் இல்லாமல், அதிமுக பொதுச் செயலாளர் பழனிசாமி முன்னிலையில் நேற்று மீண்டும் அதிமுகவில் இணைந்தனர்.

இதுகுறித்து அவர்கள் கூறியது: முன்னாள் அமைச்சர் வைத்திலிங்கம் மீண்டும் அதிமுகவுக்குத்தான் செல்வார் என் நம்பியிருந்தோம். ஆனால், எங்களிடம் ஆலோசனையோ, கருத்தோ கேட்காமல் எதிரிகட்சியான திமுகவில் இணைந்ததால் அதிர்ச்சி அடைந்தோம்.

எனவே, எங்களை நட்டாற்றில் விட்டுச் சென்ற வைத்திலிங்கத்திடமிருந்து விலகி மீண்டும் அதிமுகவில் இணைந்துள்ளோம். எங்களை போன்று பலரும் விரக்தியில் உள்ளனர். அவர்களும் விரைவில் அதிமுகவில் இணைய உள்ளனர் என்றனர்.

இதற்கிடையில் சென்னையிலிருந்து நேற்று முன்தினம் சொந்த ஊருக்கு வந்த வைத்திலிங்கம், ஓரிரு திமுக கட்சி நிர்வாகிகளை மட்டும் சந்தித்து வருகிறார்.

இவருக்கு விரைவில் தஞ்சாவூர் தெற்கு மாவட்டப் பொறுப்பாளர் பதவி வழங்கப்படஉள்ளதாகவும், அதன் பின்னர் தன்னுடைய செயல்பாடுகளில் தீவிர கவனம் செலுத்த உள்ளதாகவும் வைத்திலிங்கத்தின் ஆதரவாளர்கள் தெரிவித்தனர்.

# காலி மதுபாட்டில்களை திரும்பப் பெறும் திட்டம் விரைவில் முழுமையாக அமல்

## உயர் நீதிமன்றத்தில் தமிழக அரசு உறுதி

சென்னை, ஜன.25-

தமிழகத்தின் அனைத்து டாஸ்மாக் கடைகளிலும் காலி மதுபாட்டில்களை திரும்பப்பெறும் திட்டம் விரைவில் செயல்படுத்தப்படும் என்று சென்னை உயர் நீதிமன்றத்தில் தமிழக அரசு உறுதி அளித்துள்ளது.



தமிழகத்ததில் சுற்றுலா மலைப்பகுதிகளில் மதுபான பாட்டில்கள் வீசப்படுவதைத் தடுக்க ஒவ்வொரு பாட்டிலுக்கும் 10 ரூபாய் கூடுதலாக விலை வைத்து விற்பனை செய்து, பின்னர் காலி பாட்டில்களை திரும்ப ஒப்படைக்கும்போது 10 ரூபாயை திருப்பி அளிக்கும் திட்டத்தை அமல்படுத்த தமிழக அரசுக்கு, சுற்றுச்சூழல் மற்றும் வனப்பாதுகாப்பு தொடர்பான வழக்குகளை விசாரிக்கும் சிறப்பு அமர்வு உத்தரவிட்டிருந்தது. இத்திட்டம் மாநிலம் முழுவதும் அமல்படுத்தப்பட வேண்டும் என்றும் உத்தரவிடப்பட்டிருந்தது.

இந்த வழக்குகள் நீதிபதிகள் என்.சதீஷ்குமார், டி.பரதசக்ரவர்த்தி அடங்கிய சிறப்பு அமர்வில் மீண்டும் விசாரணைக்கு வந்தன. அப்போது, தமிழகம் முழுவதும் உள்ள 28 மாவட்டங்களில் மதுபான பாட்டில்கள் திரும்பப் பெறும் திட்டம் முழுமையாக அமல்படுத்தப்பட்டுள்ளதாகவும், மூன்று மாவட்டங்களில் பாதி அளவு அமல்படுத்தப்பட்டுள்ளதாகவும் கூடுதல் தலைமை வழக்கறிஞர் ஜெ.ரவீந்திரன் தெரிவித்தார்.

மேலும், ஏழு மாவட்டங்களில் இத்திட்டத்தை எதிர்த்து டாஸ்மாக் ஊழியர்கள் போராட்டம் நடத்துவதால் அவர்களிடம் பேச்சுவார்த்தை நடைபெற்று வருவதாகவும் விரைவில் அனைத்து மாவட்டங்களிலும் நீதிமன்றம் உத்தரவிட்டபடி முழுமையாக இந்த திட்டம் அமல்படுத்தப்படும் என்றும் அவர் உறுதியளித்தார். இதேபோல் கியூ ஆர் கோடு முறையை அமல்படுத்த மீண்டும் டெண்டர் கோரப்பட்டுள்ளதாகவும் ஜெ. ரவீந்திரன் குறிப்பிட்டார்.

அப்போது குறுக்கிட்ட நீதிபதிகள், பண்டிகை காலங்களில் டாஸ்மாக் விற்பனை ஆயிரம் கோடி என சாதனை படைப்பதாகவும் ஆனால் அமல்படுத்துவதில் என்ன பிரச்சனை? இனிமேல் கால அவகாசம் வழங்க முடியாது என்று திட்டவட்டமாக தெரிவித்தனர். இதையடுத்து வழக்கு விசாரணையை பிப்ரவரி மாதத்துக்கு ஒத்தி வைத்தனர்.

# “தமிழ் மக்களின் அனைத்து துயரங்களுக்கும் காங்கிரஸ் தான் காரணம்” சீமான்

சென்னை, ஜன.25-

“தமிழ் மக்கள் இந்த மண்ணில் படும் அனைத்து துயரங்களுக்கும் காரணம் காங்கிரஸ்தான். முதலில் இந்தியை திணித்து எனது தாய் மொழியாம் தமிழை அழிக்க நினைத்தது காங்கிரஸ்.” என நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் தெரிவித்துள்ளார்.



சென்னையில் இன்று செய்தியாளர்களை சந்தித்த சீமான், “தமிழகத்தில் ஆட்சி முறை மாற வேண்டும். தாலிக்கு தங்கம் கொடுப்பார்கள். பின்னர் மதுவை குடிக்கவைத்து அவர்களே தாலியை அறுப்பார்கள். ரேஷனில் இலவசமாக அரிசி போடுகிறார்கள். அதை எத்தனை அமைச்சர்கள், எம்பிக்கள், எம்எல்ஏக்கள் வாங்கி சாப்பிடுகிறார்கள். மக்கள் விநியோகத்துக்கு வரும்போது தரம் குறைவாக இருக்கிறது.

தமிழகத்தின் தலைநகரில் இன்னும் தண்ணீர் தேங்கி கொண்டுதான் இருக்கிறது. மக்களை வெள்ளத்தில் மிதக்க விட்டுவிட்டு வெள்ள நிவாரணம் கொடுத்ததெல்லாம் ஆட்சி இல்லை. எவ்வளவு வெள்ளம் வந்தாலும், அதை வழிந்தோட செய்வதுதான் ஆட்சி.

எனக்கும், என் கொள்கைக்கும் யாரும் போட்டியில்லை, ஒருவர் இருமொழி கொள்கை என்பார், ஒருவருக்கு கொள்கை என்றால் என்னவென்றே தெரியாது. கூட்டணி அமைப்பவர்களுக்கு கொள்கை இல்லை, சீட்டுகள் மட்டுமே இலக்கு.

திமுகவுக்கு மாற்று அதிமுக என எப்படிச் சொல்ல முடியும். தமிழகத்தில் கடன் வளர்ச்சி தான் இருக்கிறதே தவிர, வேறு ஒன்றும் இல்லை. கூட்டணி வைத்து கூடி கொள்ளையடித்தால் எல்லாம் சரியாகிவிடுமா? தேர்தல் வந்த பிறகு பேரம் பேசுவது கேவலம்.

அரசியல் இங்கே வியாபாரம் ஆக்கப்படுகிறது. யார் அதிக காசு மற்றும் சீட்டுகள் கொடுக்கிறார்களோ அவர்களிடம் சென்றுவிடுகிறார்கள். அடர்த்தியான வறுமை, அறியாமை எனும் குழந்தையைப் பெறுகிறது. வறுமையும் அறியாமையும் சேரும்போது மறதி வருகிறது. இவை மூன்றும் இப்போதிருக்கும் அரசியல்வாதிகளுக்கு முதலீடாக மாறிவிடுகிறது.

வெற்றியையும் தோல்வியையும் சமமாகக் கருதுபவன்தான் வீரன். வெற்றியடைந்தால் இருப்பேன்.. தோல்வியடைந்தால் சென்றுவிடுவேன் என்பவன் கோழை. எங்களுக்கு தெரியாத மூன்றெழுத்து பயம். எங்கள் பரம்பரைக்கே தெரிந்த மூன்றெழுத்து வீரம். திமுகவை ஒழிக்க வேண்டும் எனக் கூறுகிறார்களே தவிர, மக்களுக்கான அரசியலை கொண்டு வர வேண்டும் என நினைக்கவில்லை. மதவாத கட்சியை முதலில் கதவை திறந்து கொண்டு வந்தது யார்?

சீமானுக்கு வாக்களித்தால் பாஜக ஆட்சிக்கு வந்து விடும் எனக் கூறுகிறார்கள். இவர்களுக்கு அடிப்படை அறிவு கூட கிடையாது. தமிழகத்தில் பாஜக ஆட்சிக்கு வந்துவிடும் என சொல்வதற்கு ஒரு ஆட்சியா? ஒரு தலைவரா?. தமிழகத்தில் பாஜக ஆட்சிக்கு வராது என்று தைரியமாக சொல்ல வேண்டும். தமிழ் மக்கள் இந்த மண்ணில் படும் அனைத்து துயரங்களுக்கும் காரணம் காங்கிரஸ்தான். முதலில் இந்தியை திணித்து எனது தாய் மொழியாம் தமிழை அழிக்க நினைத்தது காங்கிரஸ்” இவ்வாறு அவர் கூறினார்.



# நந்தனம் மெட்ரோ ரயில் அலுவலக வளாகத்தில் விளையாட்டு மைதானங்களுடன் மெட்ரோஸ் பூங்கா திறப்பு

## துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் திறந்து வைத்தார்

சென்னை, ஜன.25-

நந்தனத்தில் உள்ள சென்னை மெட்ரோ ரயில் அலுவலக வளாகத்தில், விளையாட்டு மைதானங்களுடன் கூடிய மெட்ரோஸ் பூங்காவை, துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் திறந்து வைத்தார்.

சென்னை மெட்ரோ ரயில் நிறுவனத்தின் தலைமை அலுவலகம் நந்தனத்தில் செயல்பட்டு வருகிறது. இந்த வளாகத்தில் உள்ள மாநகராட்சிக்கு சொந்தமான திறந்தவெளி நிலத்துடன், மெட்ரோ ரயில் நிறுவனத்துக்கு சொந்தமான நிலப்பகுதியையும் உள்ளடக்கி மொத்தம் 3,750 சதுரமீட்டர் பரப்பளவில், ரூ.3.50 கோடியில் மெட்ரோஸ் பூங்கா மற்றும் விளையாட்டு மைதானங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

காலையில் 5 மணி முதல் 9 மணி வரையிலும், மாலையில் 5 மணி முதல் இரவு 9 மணி வரையிலும் பூங்கா திறக்கப்படும். இந்த விளையாட்டு மைதானத்தில் 3 பூப்பந்து விளையாட்டு அரங்குகள், 2 பிக்கிள் பந்து திறந்து வெளி விளையாட்டு அரங்குகள், திறந்தவெளி உடற்பயிற்சிக் கூடம் ஆகியவை நிறுவப்பட்டுள்ளன.

மெட்ரோஸ் பூங்காவை சுற்றி 370 மீ நீளத்தில் நடைபகுதி, பிரத்யேக 8 வடிவ நடைபகுதி, சிறுவர்கள் விளையாட்டு பகுதி, குடிநீர் மற்றும் கழிப்பறை வசதிகள், உள் அமர்வு மற்றும் வெளியரங்க அமர்வு பகுதிகள், வாகனங்கள் நிறுத்துமிடம் ஆகிய வசதிகளும் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

மேலும், பூங்காவில் 20 மழை நீர் சேகரிப்பு அமைப்புகள், பூங்காவில் உருவாகும் இலை, தழைகளை மக்கி உரமாக்க 3 கம்போஸ்ட் குழிகளும் அமைக்கப்பட்டுள்ளன. பூங்கா மற்றும் விளையாட்டு அரங்குகளை பொதுமக்கள் இடையூறுமின்றி பயன்படுத்த ஏதுவாக, அண்ணாசாலையையொட்டி பிரத்யேக நுழைவாயில் அமைக்கப்பட்டுள்ளது.

இந்த மெட்ரோஸ் பூங்கா மற்றும் விளையாட்டு மைதானங்களை துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் நேற்று திறந்து வைத்து, பார்வையிட்டார். இந்நிகழ்வில், மாநகராட்சி மேயர் ஆர்.பிரியா, துணை மேயர் மு.மகேஷ்குமார், மாநகராட்சி ஆணையர் ஜெ.குமரகுருபரன், சென்னை மெட்ரோ ரயில் நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் எம்.ஏ.சித்திக், சிறப்பு முயற்சிகள் துறை செயலர் கே.கோபால், எம்எல்ஏ த.வேலு உள்ளிட்டோர் பங்கேற்றனர்.




# செல்போன் செயலி மூலம் மும்பை தொழிலதிபரிடம் ரூ.11 கோடி மோசடி

மும்பை, ஜன.25-

செல்போன் செயலி மூலம் மும்பையைச் சேர்ந்த தொழிலதிபர் ஒருவரிடம் ரூ.11 கோடி மோசடி செய்யப்பட்டுள்ளது.

தெற்கு மும்பை சர்ச்கேட் பகுதியைச் சேர்ந்த 68 வயது தொழிலதிபர் பங்குச் சந்தையில் முதலீடு செய்ய திட்டமிட்டுள்ளார். அப்போது சமூக வலைதளத்தில் விளம்பரம் ஒன்றை அவர் பார்த்துள்ளார். அதனைத் தொடர்ந்து மோகன் சர்மா என்ற பெயரில் வாட்ஸ்அப்பில் பேசிய ஒருவர் பங்குச் சந்தை ஆலோசகராக அறிமுகமாகியுள்ளார்.

‘‘டிரேடர் டைட்டன் விஐபி 46’’ என்ற வாட்ஸ்அப் குழுவில் இணைக்கப்பட்ட அந்த தொழிலதிபரிடம் பல முதலீட்டாளர்கள் தங்களுக்கு அதிக லாபம் கிடைத்தாக கூறிய ஸ்கிரீன்ஷாட்களை அந்த குழுவில் பகிர்ந்துள்ளனர். இதனை உண்மையென நம்பிய அந்த தொழிலதிபரிடம் பிரீமியம் உறுப்பினராக மாற தனிப்பட்ட டிரேடிங் செயலியை பதிவிறக்கம் செய்யுமாறு கூறினர்.

அதில் கணக்கு தொடங்கியவுடன், தொழிலதிபர் பல்வேறு வங்கிக் கணக்குகளுக்கு பணத்தை அனுப்பியுள்ளார். அவர் அனுப்பும் பணம் உடனடியாக அந்தச் செயலியின் வேலட்டில் பிரதிபலிக்கும் வகையில் வடிவமைக்கப்பட்டிருந்தது. இதனால் உண்மையாக வர்த்தகம் நடப்பதாக நம்பியுள்ளார்.


விங்ஸ் ஆப் ப்ரீடம் போன்ற பல்வேறு குழுக்கள் மூலம் அவருக்குப் பயிற்சி மற்றும் ஆலோசனைகளும் வழங்கப்பட்டுள்ளன. கடந்த டிசம்பர் 29, 2025 முதல் ஜனவரி 19, 2026 வரையிலான குறுகிய காலத்திற்குள் சுமார் ரூ.10.98 கோடியை அவர் முதலீடு செய்தார்.

இந்நிலையில், தனது முதலீட்டை திரும்பப் பெற தொழிலதிபர் முயன்றபோது பணத்தைத் திரும்பப் பெற வேண்டுமானால் ரூ.8 கோடி அபராதம் செலுத்த வேண்டும் என்று மிரட்டியுள்ளனர். அப்போதுதான் ஏமாற்றப்பட்டதை உணர்ந்தார். சைபர் க்ரைமில் தொழிலதிபர் புகார் அளித்ததைத் தொடர்ந்து அடையாளம் தெரியாத நபர்கள் மீது மோசடி, கூட்டுச் சதி உள்ளிட்ட பிரிவுகளின் கீழ் வழக்குப் பதிவு செய்து போலீஸார் தீவிர விசாரணையை தொடங்கியுள்ளனர்.

# 5 வயது குழந்தையின் நுரையீரல் பாதைக்குள் சிக்கிய விசிலை வெளியே எடுத்த மருத்துவர்கள்

சென்னை, ஜன.25-

விளையாடும்போது தவறுதலாக 5 வயது குழந்தையின் நுரையீரல் பாதைக்குள் சிக்கிய விசிலை எழும்பூர் அரசு குழந்தைகள் மருத்துவமனை மருத்துவர்கள் வெளியே எடுத்தனர்.



எழும்பூர் அரசு குழந்தைகள் மருத்துவமனை இயக்குநர் மருத்துவர் எஸ்.மதிவாணன் கூறியதாவது: திருவண்ணாமலையை சேர்ந்த 5 வயது பெண் குழந்தை ஒன்று, விசில் ஊதி விளையாடிக் கொண்டிருந்தபோது, தவறுதலாக அதை விழுங்கிவிட்டது.

அது சுவாசப் பாதைக்குள் சென்று சிக்கிக் கொண்டது. இதையடுத்து, குழந்தையை அருகில் உள்ள மருத்துவமனைக்கு கொண்டு சென்றுள்ளனர். அங்கு எக்ஸ்ரே, ஸ்கேன் பரிசோதனைகள் செய்யப்பட்டதில், எந்த பொருளும் தென்படவில்லை.

இதனால், குழந்தையை வீட்டுக்கு அனுப்பி வைத்துவிட்டனர். ஆனால், குழந்தை சுவாசிக்கும் போது எல்லாம் விசில் சத்தம் வந்து கொண்டே இருந்தது. இதையடுத்து உயர் சிகிச்சைக்காக குழந்தையை எழும்பூர் அரசு குழந்தைகள் நல மருத்துவமனைக்கு பெற்றோர் அழைத்து வந்தனர்.

இங்கு பரிசோதனை செய்து பார்த்ததில் குழந்தையின் நுரையீரலுக்குள் உள்ள வலது சுவாச குழாயில் நான்காம் நிலை பகுதியில் விசில் சிக்கியிருந்தது தெரியவந்தது. வழக்கமாக, குழந்தைகள் எதையாவது விழுங்கிவிட்டால், உணவு குழாய் வழியே ஜீரண மண்டலத்துக்குள் சென்றுவிடும். அரிதாக இந்த குழந்தையின் வலது பக்க நுரையீரல் சுவாச பாதையின் விசில் சிக்கிக் கொண்டுள்ளது.

இதையடுத்த, மருத்துவமனையின் நுரையீரல் பிரிவு பேராசிரியர் பாலமுருகன் தலைமையில் மருத்துவர்கள் ஷாஜாத்தி பேகம், அசோக் குமார், சக்திவேல் ஆகியோர் அடங்கிய பல்நோக்கு மருத்துவக் குழுவினர் குழந்தைக்கு சிகிச்சை அளிக்க முன்வந்தனர்.

அதன்படி, ஃபைபர் ஆப்டிக் ப்ராங்கோஸ்கோபி எனப்படும் ஊடு குழாய் கருவியை குழந்தையின் சுவாச பாதையில் செலுத்தி 3 மணி நேரத்துக்கு பிறகு விசிலை வெளியே எடுத்தனர். இந்த சிகிச்சையின்போது குழந்தைக்கு மயக்க மருந்து கொடுக்கப்பட்டது.

தனியார் மருத்துவமனைகளில் இதற்கு ரூ.3 லட்சம் வரை செலவாகும். இந்த சிகிச்சை, முதலமைச்சரின் விரிவான மருத்துவ காப்பீட்டு திட்டத்தில் இலவசமாக செய்யப்பட்டது.

குழந்தைகளுக்கு விசில், சிறு பொருட்கள், பட்டன், பேட்டரி போன்றவற்றை விளையாட வழங்கக்கூடாது. தவறுதலாக விழுங்கும்போது, அது எளிதில் சுவாச பாதைக்குள் சிக்கிக் கொள்ளும்.பெற்றோர் விழிப்புணர்வுடன் இருக்க வேண்டும்.இவ்வாறு அவர் தெரிவித்தார்.



■ தென்காசி மாவட்டம் சுரண்டை அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியில்16 வது தேசிய வாக்காளர் தினம் 2026 ஐ முன்னிட்டு வாக்காளர் விழிப்புணர்வு தொடர்பாக நடைபெற்ற கட்டுரைப்போட்டி, பேச்சுப்போட்டி, பாட்டுப்போட்டி, ஓவியப் போட்டி கோலப்போட்டி, வினாடிவினா ஆகிய போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவிகளுக்கு மாவட்ட தேர்தல் அலுவலர் /மாவட்ட ஆட்சித்தலைவர் ஏ.கே.கமல்கிஷோர், பரிசுகளை வழங்கி கௌரவித்தார்.



■ தென்காசி மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் மாவட்ட தேர்தல் அலுவலர் / மாவட்ட ஆட்சித் தலைவர் ஏ.கே. கமல் கிஷோர்.. அங்கீகரிக்கப்பட்ட அனைத்து கட்சி பிரதிநிதிகளுடன் வாக்காளர் பட்டியல் சிறப்புத் தீவிர திருத்தம்2026 மனுக்கள் மீது உரிமை கோரல் மற்றும் ஆட்சபனைகள் குறித்த கோரிக்கை மனுக்கள் வழங்குவது குறித்து காலவரம்பு நீட்டிப்பு தொடர்பான ஆலோசனை கூட்டம் நடைபெற்றது.

## வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்க்க சிறப்பு முகாம்

சென்னை, ஜன.25-

மாநகராட்சி வெளியிட்ட செய்திக்குறிப்பு: சென்னை மாவட்டத்துக்கு உட்பட்ட 16 சட்டப்பேரவை தொகுதிகளிலும் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிரத் திருத்தத்துக்கான ஏற்புரைகள் மற்றும் மறுப்புரைகள் தாக்கல் செய்யும் காலம், வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்க்க, திருத்துவதற்கான அவகாசம் ஜன.30ம் தேதி வரை நீட்டிக்கப்பட்டுள்ளது.



அதனால் வார விடுமுறை நாட்களான இன்றும், நாளையும் சென்னையில் உள்ள 4,079 வாக்குச்சாவடி மையங்களிலும் சிறப்பு முகாம்கள் நடத்தப்படும். இதில் வரைவு வாக்காளர் பட்டியலில் பெயர் இடம்பெறாதவர்கள் மற்றும் 18 வயது நிரம்பிய தகுதியுடைய நபர்கள் படிவம்ஸ்ரீ6 ஐ, உறுதிமொழி படிவத்துடன் சமர்ப்பித்து தங்கள் பெயரை சேர்க்க விண்ணப்பிக்கலாம்.


ஒரு தொகுதியின் வாக்காளர் பட்டியலில் பெயர் உள்ள எந்தவொரு வாக்காளரும், முன்மொழியப்பட்ட சேர்க்கைக்கு ஆட்சேபனை தெரிவிக்க அல்லது ஏற்கெனவே உள்ள பெயரை நீக்க கோர படிவம்ஸ்ரீ7 மூலம் விண்ணப்பிக்கலாம்.

முகவரி மாற்றுதல், ஏற்கெனவே வாக்காளர் பட்டியலில் உள்ள பதிவுகளை திருத்தம் செய்ய, வாக்காளர் புகைப்பட அடையாள அட்டை மாற்றம் செய்ய, மாற்றுத்திறனாளி வாக்காளர்கள் என குறிப்பது ஆகிய கோரிக்கை உடையவர்கள் படிவம்ஸ்ரீ8 மூலம் விண்ணப்பிக்கலாம். இறுதி வாக்காளர் பட்டியல் பிப்.17ம் தேதி வெளியிடப்பட உள்ளது.

## பிரதமர் மோடி வருகையை எதிர்த்து கருப்பு கொடி போராட்டம் நடத்திய காங்கிரஸ் கட்சியினர் கைது

சென்னை, ஜன.25-

கிராமப்புறங்களில் செயல்படுத்தப்பட்டு வரும் 100 நாள் வேலை உறுதி திட்டத்தின் பெயரை மாற்றியது மற்றும் அதில் இருந்த மகாத்மா காந்தியின் பெயரை நீக்கியதை கண்டித்து தமிழ்நாடு காங்கிரஸ் சார்பில் பல்வேறு போராட்டங்கள் நடத்து வருகிறது.



இந்நிலையில், நேற்று தமிழகம் வந்த பிரதமர் மோடிக்கு எதிராக கருப்பு கொடி காட்டி போராட்டம் நடத்த இருப்பதாக காங்கிரஸ் அறிவித்திருந்தது. அதனைத் தொடர்ந்து நேற்றுமுன்தினம் இரவு, முன்னாள் எம்பி பெ.விஸ்வநாதன் தலைமையில் காங்கிரஸார் மதுராந்தகத்தில் கூடி தீப்பந்தம் ஏற்றி எதிர்ப்பு தெரிவித்தனர்.

அவர்களை போலீஸார் கைது செய்தனர். தமிழ்நாடு காங்கிரஸ் எஸ்சி அணி தலைவர் ரஞ்சன்குமாரை போலீஸார் நேற்று முன்தினம் வீட்டு காவலில் வைத்தனர். இந்நிலையில், அவர் தனது வீட்டு மாடியில் மோடியே, திரும்பி செல் என்ற வாசகம் இடம் பெற்ற பலூனை பறக்க விட்டார்.

இதன் தொடர்ச்சியாக, மாவட்ட தலைவர் ஜெ.டில்லிபாபு தலைமையில் பெரியமேடு பகுதியில் கருப்பு உடை அணிந்து, கருப்பு கொடி ஏந்தி, கருப்பு பலூன்களுடன் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட காங்கிரஸாரை போலீஸார் கைது செய்தனர்.

மேலும், பார்கிட் சாலை பெரியார் சிலை அருகிலும் கருப்பு கொடி காட்டிய காங்கிரஸார், டில்லி பாபுவின் வட சென்னையில் உள்ள அலுவலகம் முன்பு கருப்பு கொடியுடன் கூடிய காங்கிரஸாரை போலீஸார் கைது செய்து, பின்னர் மாலையில் விடுவித்தனர்.

## கறிக்கோழி வளர்ப்பு விவசாயிகள் போராட்டம்அமைச்சர் அனிதா ராதாகிருஷ்ணன் விளக்கம்

சென்னை, ஜன.25-

கறிக்கோழி வளர்ப்பு விவசாயிகள் போராட்டத்தில் உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்று, அமைச்சர் அனிதா ராதாகிருஷ்ணன் தெரிவித்தார். தமிழகத்தில் தனியார் நிறுவனங்கள் கோழிக் குஞ்சுகளை விவசாயிகளிடம் கொடுத்து வளர்த்து 45 நாட்களுக்குப் பின் திரும்ப பெற்றுக் கொள்கிறார்கள்.



இதற்காக, ஒரு கிலோ கோழிக்கு ரூ.6.50 கூலியாக தருகிறார்கள். இந்த கூலியை ரூ.20 ஆக உயர்த்தி தரும்படி பல்வேறு மாவட்டங்களில் கறிக்கோழி வளர்ப்பு உரிமையாளர்கள் போராட்டம் நடத்தி வருகின்றனர். அவர்களில் பலர் கைது செய்யப்பட்டனர்.

இதுதொடர்பாக, தமிழக சட்டப்பேரவையில் சிறப்பு கவன ஈர்ப்பு தீர்மானம் நேற்று கொண்டு வரப்பட்டது. இந்த தீர்மானத்தில் விவசாயிகள் கோரிக்கையை நிறைவேற்றி தர வலியுறுத்தி சட்டப்பேரவை உறுப்பினர்கள் கொங்கு ஈஸ்வரன், அப்துல் சமது, ஏ.கே. செல்வராஜ், அருள், ராஜேஷ் கண்ணா, ராமச்சந்திரன், நாகை மாலி பேசினர்.

இதற்கு, அமைச்சர் அனிதா ராதாகிருஷ்ணன் பதிலளித்து பேசுகையில், “இந்த விவகாரம் கறிக்கோழி வளர்ப்பவர்களுக்கும், சம்பந்தப்பட்ட தனியார் நிறுவனங்களுக்குமான பிரச்சினையாகும்.

அவர்களே கூலி மற்ற விஷயங்களை பேசித் தீர்த்துக் கொண்டு வந்தார்கள். இதற்கும், அரசுக்கும் நேரடியாக எந்த சம்பந்தமும் இல்லை.

அதேநேரம், இந்த விவகாரம் முதல்வர் கவனத்துக்கு சென்றதால், இதுதொடர்பாக, ஆய்வு செய்ய ஒரு குழு அமைக்கப்பட்டுள்ளது.

தமிழகத்தில் 20 ஆயிரம் விவசாயிகள் 66 நிறுவனங்களுக்காக கோழி வளர்க்கிறார்கள். ஆண்டுக்கு 50 முதல் 55 கோடியளவில் கோழிகள் வளர்க்கப்படுகின்றன இந்த பிரச்சினை சுமூகமாக பேசி தீர்க்கப்படும்” என்று தெரிவித்தார்.

## ‘‘அரசின் வர்த்தக ஒப்பந்தங்கள் இளைஞர்களுக்கு வாய்ப்புகளை உருவாக்குகின்றன’’ பிரதமர் மோடி

புதுடெல்லி, ஜன.25-

திறமையான இளைஞர்களுக்கு உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் வாய்ப்புகளை வழங்கும் வகையில் மத்திய அரசு, பல்வேறு நாடுகளுடன் வர்த்தகம் மற்றும் இடப்பெயர்வு ஒப்பந்தங்களை மேற்கொண்டு வருவதாக பிரதமர் நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.





18வது வேலைவாய்ப்புத் திருவிழாவின் கீழ் மத்திய அரசின் பல்வேறு துறைகள் மற்றும் அமைப்புகளில் புதிதாக நியமிக்கப்பட்டுள்ள 61,000க்கும் அதிகமான இளைஞர்களுக்கு நியமனக் கடிதங்களை வழங்கும் விழா இன்று நடைபெற்றது. இதில், காணொலிக்காட்சி மூலம் பங்கேற்று நியமனக் கடிதங்களை வழங்கிய பிரதமர் நரேந்திர மோடி, பின்னர் அவர்களுக்காக உரையாற்றினார்.

அப்போது அவர் கூறியதாவது: ‘‘உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் இளைஞர்களுக்குப் புதிய வாய்ப்புகளை உருவாக்க அரசாங்கம் தொடர்ந்து முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது. நாட்டின் திறமையான இளைஞர்களுக்கு வாய்ப்புகளை வழங்கும் வகையில், மத்திய அரசு பல்வேறு நாடுகளுடன் வர்த்தகம் மற்றும் இடப்பெயர்வு ஒப்பந்தங்களை மேற்கொண்டு வருகிறது.

நாட்டின் பொருளாதாரம் தற்போது வலுவடைந்திருக்கிறது. பத்தாண்டுகளுக்குள் தனது மொத்த உள்நாட்டு உற்பத்தியை (ஜிடிபி) இரட்டிப்பாக்கிய உலகின் ஒரே பொருளாதாரம் இந்தியாதான். இன்று, 100க்கும் மேற்பட்ட நாடுகள் அந்நிய நேரடி முதலீடு (திஞிமி) மூலம் இந்தியாவில் முதலீடு செய்கின்றன. 2014க்கு முந்தைய பத்தாண்டுகளுடன் ஒப்பிடும்போது அந்நிய நேரடி முதலீட்டு வரவு 2.5 மடங்குக்கு மேல் அதிகரித்துள்ளது. இந்த அந்நிய முதலீட்டின் வரவு, இளைஞர்களுக்கு எண்ணற்ற வேலைவாய்ப்புகளை உருவாக்கி வருகிறது.

'ஜன கண மன' பாடலை தேசிய கீதமாகவும், 'வந்தே மாதரம்' பாடலை தேசியப் பாடலாகவும் அரசியல் சாசனம் அங்கீகரித்த நாள் ஜனவரி 24. வேலைவாய்ப்புத் திருவிழா (ரோஜ்கர் மேளா) ஒரு நிறுவனமாக மாறியுள்ளது. இதுவரை லட்சக்கணக்கான இளைஞர்கள் பல்வேறு அரசுத் துறைகளில் இருந்து பணி நியமனக் கடிதங்களைப் பெற்றுள்ளனர்.

இன்று விநியோகிக்கப்பட்ட பணி நியமனக் கடிதங்கள் தேசத்தைக் கட்டியெழுப்புவதற்காக உங்களுக்கு விடுக்கப்பட்டிருக்கும் அழைப்பு. வளர்ந்த இந்தியாவை நோக்கி இளைஞர்களை வழிநடத்துவதற்கான ஒரு சங்கல்ப பத்திரம்’’ இவ்வாறு பிரதமர் தெரிவித்தார்.

ரோஜ்கர் மேளா தொடங்கப்பட்டதிலிருந்து இதுவரை நாடு முழுவதும் 11 லட்சத்துக்கும் அதிகமான வேலை நியமனக் கடிதங்கள் வழங்கப்பட்டுள்ளன. 18 வது வேலைவாய்ப்புத் திருவிழா நாடு முழுவதும் 45 இடங்களில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. நாட்டின் பல பகுதிகளில் இருந்து தெரிவு செய்யப்பட்டு, புதிதாக நியமிக்கப்பட்டுள்ள இவர்கள், மத்திய உள்துறை, சுகாதாரம் மற்றும் குடும்பநலத்துறை, நிதிச் சேவைகள் துறை, உயர்கல்வித்துறை உள்ளிட்ட மத்திய அரசின் பல்வேறு அமைச்சகங்கள் மற்றும் துறைகளில் பணியில் சேர உள்ளனர்.



## முதலமைச்சரின் அறிவிப்பை தொடர்ந்து பகுதிநேர ஆசிரியர்களின் போராட்டம் ஒத்திவைப்பு

சென்னை, ஜன.25-

முதலமைச்சரின் அறிவிப்பை தொடர்ந்து பகுதிநேர ஆசிரியர்களின் போராட்டம் ஒத்திவைக்கப்பட்டது. சிறப்பு மதிப்பெண் மூலம் பகுதிநேர ஆசிரியர்கள் பணி நிரந்தரம் செய்யப்படுவர் என்று பேரவையில் முதல்வர் உறுதியளித்திருந்தார். இதையடுத்து எங்களுக்கு பாதகம் இல்லாத அரசாணை வரும் என்ற நம்பிக்கையில் போராட்டம் ஒத்திவைப்பு என பகுதிநேர ஆசிரியர்கள் அறிவித்துள்ளனர். பணி நிரந்தரம் கோரி கடந்த 17 நாட்களாக பகுதிநேர ஆசிரியர்கள் சென்னையில் போராட்டம் நடத்தி வந்தனர்.

## திருப்பதியில் ஒரு வயது குழந்தையை கடத்தி விற்பனை செய்த வேலூர் தம்பதி உட்பட 6 பேர் கைது

திருப்பதி, ஜன.25-

திருப்பதியில் ஒரு வயது குழந்தையை கடத்தி விற்பனை செய்த வேலூர் தம்பதி உட்பட 6 பேர் கைது செய்யப்பட்டனர். திருப்பதி சிந்தலச்செருவு அருகே குடிசையில் வசித்து வந்த தம்பதி சுசித்ரா மஸ்தானின் ஒரு வயது குழந்தை கடத்தப்பட்டுள்ளது. ஜனவரி 21ம் தேதி வீட்டின் முன்பு விளையாடிக் கொண்டிருந்த குழந்தை ஜெயஸ்ரீ காணாமல் போய்விட்டதாக பெற்றோர் புகார் அளித்திருந்தனர். தனது குடிசை அருகே தங்கியிருந்த வேலூர் தம்பதியையும் காணவில்லை என்பதால் சுசித்ராவுக்கு சந்தேகம் வந்துள்ளது.




## ரூ.2,200 கோடி லஞ்சப் புகார்: அதானி பங்கு 13% வரை வீழ்ச்சி

மும்பை, ஜன.25-

அதானி குழுமத்தின் ரூ.2,200 கோடி (265 மில்லியன் டாலர்) லஞ்சப் புகார் தொடர்பாக, கவுதம் அதானி மற்றும் அவரது உறவினர் சாகர் அதானி ஆகியோருக்கு சம்மன் அனுப்ப அமெரிக்க நீதிமன்றத்தின் அனுமதியை அந்நாட்டுப் பங்குச் சந்தை ஒழுங்குமுறை ஆணையமான எஸ்இசி கோரியுள்ளது.

கவுதம் அதானி மற்றும் சாகர் அதானிக்கு சம்மன் வழங்க இந்திய அதிகாரிகளிடம் இருந்து போதிய ஒத்துழைப்பு கிடைக்கவில்லை என்று எஸ்இசி தெரிவித்துள்ளது. எனவே, அவர்களுக்கு மின்னஞ்சல் வாயிலாக சம்மன் அனுப்ப நியூயார்க் நீதிமன்றத்திடம் அனுமதி கேரப்பட்டுள்ளதாக எஸ்இசி தெரிவித்துள்ளது.

இந்தத் தகவலால் இந்தியப் பங்குச் சந்தைகளில் அதானி குழும நிறுவனங்களின் பங்குகள் நேற்றைய வர்த்தகத்தில் 13%வரை சரிவைச் சந்தித்தன.

அதானி குழுமத்தின் முதன்மை நிறுவனமான அதானி எண்டர்பிரைசஸ் பங்கு விலை 10.76% சரிந்து ரூ. 1,861.80க்கும், அதானி கிரீன் எனர்ஜி 13.81% சரிந்து 779.40க்கும் வர்த்தகமானது. இதன் எதிரொலியாக மும்பை பங்குச் சந்தை குறியீட்டு எண் சென்செக்ஸ் 769.67 புள்ளிகள் சரிந்து 81,537.70ல் நிறைவடைந்தது. நிப்டி 241.25 புள்ளிகள் வீழ்ச்சியடைந்து 25,048.65 புள்ளிகளில் நிலை பெற்றது.

## பிப்.2ல் அரசு மருத்துவர்கள் முன்பு ஆஜராக வேண்டும்: சவுக்கு சங்கருக்கு ஐகோர்ட் உத்தரவு

சென்னை, ஜன.25-

நிலுவையில் உள்ள வழக்குகள் தொடர்பாகவும், வழக்கின் விசாரணை அதிகாரிகள் தொடர்பாகவும் எந்த வீடியோக்களையும் வெளியிடக்கூடாது என்றும், பிப்.2ம் தேதி அரசு மருத்துவர்கள் முன்பாக மருத்துவ பரிசோதனைக்கு ஆஜராக வேண்டுமென்றும் சவுக்கு சங்கருக்கு உயர் நீதிமன்ற நீதிபதிகள் உத்தரவிட்டுள்ளனர்.



சவுக்கு மீடியா தலைமை செயல் அதிகாரியான பிரபல யூடியூபர் சவுக்கு சங்கரை ஆதம்பாக்கம் மற்றும் சைதாப்பேட்டை போலீஸார் இரு மோசடி வழக்குகளின்கீழ் கடந்த டிச.13ம் தேதி கைது செய்தனர்.

சவுக்கு சங்கருக்கு மருத்துவ ரீதியாக உடல்நல பிரச்சினைகள் இருப்பதால் அவரை ஜாமீனில் விடுவிக்க வேண்டுமென கோரி அவரது தாயார் கமலா உயர் நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்திருந்தார். அந்த மனுவை விசாரித்த உயர் நீதிமன்றம், சவுக்கு சங்கருக்கு மார்ச் 25 வரை இடைக்கால ஜாமீன் வழங்கியுள்ளது.

இந்நிலையில், ஜாமீன் நிபந்தனைகளை மீறி வழக்கு தொடர்பாகவும், வழக்கின் விசாரணை அதிகாரிகளை மிரட்டும் வகையிலும் தொடர்ந்து வீடியோக்களை வெளியிட்டு வருவதால் சவுக்கு சங்கருக்கு வழங்கப்பட்டுள்ள இடைக்கால ஜாமீனை ரத்து செய்யக் கோரி சைதாப்பேட்டை காவல் ஆய்வாளர் தரப்பில் உயர் நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்யப்பட்டது.

இந்த மனு மீதான விசாரணை நீதிபதிகள் பி.வேல்முருகன், எம்.ஜோதிராமன் ஆகியோர் அடங்கிய அமர்வில் ஏற்கெனவே விசாரணைக்கு வந்தது. அப்போது ‘மருத்துவ காரணங்களைக் கூறி ஜாமீன் பெற்றுள்ள சவுக்கு சங்கர், ஜாமீன் நிபந்தனைகளை மீறி தற்போது தொடர்ந்து மிரட்டல் வீடியோக்களை வெளியிட்டு வருகிறார்’ என அரசு தரப்பில் குற்றம் சாட்டப்பட்டது.

அதையடுத்து, நீதிபதிகள் இந்த வழக்கில் நேற்று பிறப்பித்த உத்தரவில் கூறியிருப்பதாவது: நிலுவையில் உள்ள வழக்குகள் தொடர்பாகவோ அல்லது வழக்கின் விசாரணை அதிகாரிகள் தொடர்பாகவோ கருத்துகளை தெரிவித்து எந்த வீடியோக்களையும் சவுக்கு சங்கர் வெளியிடக்கூடாது. குறிப்பாக, தவறான தகவல்களை பொதுவெளியில் பரப்பக் கூடாது.

வழக்கில் குற்றம் சாட்டப்பட்ட மற்ற நபர்களுடன் தொடர்பு கொள்ளக்கூடாது. அவர் அமைதியாக இருந்து மருத்துவ சிகிச்சை மட்டும் மேற்கொள்ள வேண்டும். அவரது உடல் நிலை குறித்து மருத்துவ பரிசோதனை செய்ய ராஜீவ் காந்தி அரசு பொது மருத்துவமனையில் மருத்துவ நிபுணர்கள் அடங்கிய குழுவை டீன் அமைக்க வேண்டும். அந்தக் குழுவின் முன்பாக சவுக்கு சங்கர் வரும் பிப்.2ம் தேதி காலை 8 மணிக்கு ஆஜராக வேண்டும்.

அவரது உடல் நிலையை பரிசோதித்து மருத்துவமனை டீன் பிப்.3ம் தேதி அறிக்கை தாக்கல் செய்ய வேண்டும். அதன்பிறகு அவரது ஜாமீனை ரத்து செய்வதா, வேண்டாமா என்பது குறித்து முடிவு செய்யப்படும். இவ்வாறு உத்தரவிட்ட நீதிபதிகள், வழக்கு விசாரணையை பிப்.3ம் தேதிக்கு தள்ளி வைத்துள்ளனர்.

# திசையன்விளை மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகக் கல்லூரியில் வேலைவாய்ப்பு முகாம்

திசையன்விளை, ஜன.25-

திசையன்விளை மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகக் கல்லூரியில், திருநெல்வேலி இலக்கியா கன்சல்டன்சி நிறுவனம் மற்றும் தனா கம்பியூட்டர்ஸ் இணைந்து நடத்திய, மாபெரும் வேலைவாய்ப்பு முகாம் சிறப்பாக நடைபெற்றது. இதில் 50 க்கு மேற்பட்ட மாணவ மாணவிகள் கலந்து கொண்டனர்.



இதில் தேர்வான 8 மாணவ மாணவிகளுக்கு அந்நிறுவனத்தின் உரிமையாளர் சரவணன் அவர்கள் பணி நியமன ஆணையை வழங்கினார். மேலும் இம்முகாமில் திசையன்விளை தனா கம்ப்யூட்டர் உரிமையாளர் தனலட்சுமி அவர்கள் கலந்து கொண்டார்.

இம்முகாமிற்கான ஏற்பாடுகளை கல்லூரி முதல்வர் முனைவர் து. லில்லி அவர்கள் சிறப்பாக செய்திருந்தார்.





■ தென்காசி மாவட்டம் குற்றாலம் ஸ்ரீபராசக்தி மகளிர் கல்லூரியில், 16 வது தேசிய வாக்காளர் தினம் 2026 ஐ முன்னிட்டு, மாணவிகளின் வாக்காளர் விழிப்புணர்வு தொடர்பான மைமிங் நிகழ்வினை மாவட்ட தேர்தல் அலுவலர் / மாவட்ட ஆட்சித்தலைவர் ஏ.கே.கமல்கிஷோர், பார்வையிட்டார். உடன் தென்காசி சார் ஆட்சியர் வைஷ்ணவிபால்,உள்ளார்




■ தமிழ்நாடு மருத்துவத்துறை அமைச்சப்பணி அலுவலர் சங்கத்தின் மாநில உயர்நிலைக் குழு கூட்டம், திருச்சி மாவட்டம் மத்திய பேருந்து நிலையம் அருகில் ஆனந்த் (ராசி மஹாலில்) நடைபெற்ற கூட்டத்திற்கு, மாநிலத் தலைவர் ரவிக்குமார் உரையாற்றிய போது, அருகில் மாநில பொதுச் செயலாளர் முத்து ரமேஷ், மாநில பொருளாளர் பார்த்தசாரதி, மாநில துணைத்தலைவர் செந்தில்வேல், கண்ணன், அமைப்புச் செயலாளர் பாலமுருகன், துணை பொதுச்செயலாளர் சேகர், இளங்கோ, கமலக்கண்ணன், சூரிய நாராயணன், கோதண்டராமன், கவிதா மற்றும் திருச்சி மாவட்ட அரசு அலுவலர் ஒன்றிய தலைவர் சதீஷ்பாபு ஆகியோர் கலந்துகொண்டு 16 அம்ச கோரிக்கையை வலியுறுத்தி தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. முடிவில் மாநில பொருளாளர் பார்த்தசாரதி நன்றியுரை கூறினார்.



■ மதுரை மாவட்டம், பாத்திமா கல்லூரியில், தேசிய பெண் குழந்தை தினத்தில், உலகம் உங்கள் கையில் திட்டத்தின் கிழ் தமிழ்நாடு விலையில்லா மடிக்கணினிகளை 832 மாணவிகளுக்கு மாவட்ட ஆட்சித் தலைவர் கே.ஜே. பிரவீன்குமார் வழங்கினார்.

# கூட்டணி குறித்து தெளிவான முடிவெடுப்போம்: தேமுதிக பொதுசெயலாளர் பிரேமலதா பேட்டி

மீனம்பாக்கம், ஜன.25-

சென்னை விமானநிலையத்தில் இன்று காலை தேமுதிக பொது செயலாளர் பிரேமலதா விஜயகாந்த் அளித்த பேட்டி:



தனது கட்சி பொதுக்கூட்டத்தில் கலந்து கொள்வதற்காக பிரதமர் மோடி வந்து சென்றுள்ளார். இதில் நான் கருத்து சொல்ல எதுவுமில்லை. தேர்தல் கூட்டணி குறித்து எங்கள் கட்சி நிர்வாகிகளின் கருத்துகளை கேட்டு, உரிய நேரத்தில் கூட்டணி அறிவிப்பை வெளியிடுவோம். நான் ஏற்கனவே 3 கட்டங்களாக சுற்றுப்பயணம் மேற்கொண்டு உள்ளேன். இப்போது தூத்துக்குடியில் இருந்து வரும் பிப்ரவரி 3ம் தேதி முதல் கன்னியாகுமரி, விருதுநகர் உள்பட பல்வேறு இடங்களுக்கு 4வது கட்ட சுற்றுப்பயணத்தை மேற்கொள்கிறேன்.

யார், யாருக்கு எத்தனை தொகுதி என்று இதுவரை எந்த கட்சியும் அறிவிக்கவில்லை. பிப்ரவரி 20ம் தேதிக்குப் பிறகுதான் தேர்தல் தேதி அறிவிக்கப்பட உள்ளது. அதனால் எங்களுக்கு இன்னும் கால அவகாசம் உள்ளது. தேமுதிக குழந்தைகளுக்கு எப்போது திருமணம் செய்ய வேண்டும், எந்த இடத்தில் திருமணம் செய்து கொடுக்க வேண்டும் என்று ஒரு தாயாக எனக்குத் தெரியும்.

தேமுதிகவை பொறுத்தவரை, எனக்கும் கடமைகள், பொறுப்புகள் அதிகமாக உள்ளன. எனவே, உரிய நேரத்தில், அனைவரும் போற்றும் வகையில் ஒரு நல்ல கூட்டணி அமைப்போம். எது வேண்டுமானாலும் நடக்கலாம். அதே நேரத்தில், தேமுதிகவை பொறுத்தவரை, தமிழ்நாட்டு மக்களுக்கு நல்லது நடக்கும் விதத்தில், நாங்கள் ஆழமாகச் சிந்தித்து, தெளிவாக முடிவெடுப்போம். இவ்வாறு அவர் கூறினார்.

# உடுமலை திருப்பதி ஸ்ரீ பாலாஜி சேரிட்டபிள் டிரஸ்ட் வாளவாடி அரிமா சங்கம் நடத்தும் இலவச மருத்துவ முகாம்

உடுமலை, ஜன.25-

திருப்பதி ஸ்ரீ பாலாஜி சேரிட்டபிள் டிரஸ்ட் வாளவாடி அரிமா சங்கம் நடத்தும் இலவச மருத்துவ முகாமை உடுமலை திருப்பதி பாலாஜி அறக்கட்டளை தலைவர் மற்றும் நிர்வாகிகள் துவக்கி வைத்தார்கள். இந்நிகழ்ச்சியில் வாளவாடி அரிமா சங்க நிர்வாகிகள்



கலந்து கொண்டார்கள். இந்த மருத்துவ முகாமில் உணவே மருந்து, பாரம்பரிய உணவு வகைகளை பொதுமக்களின் பார்வைக்கு வைத்து விளக்கினார்கள். இந்நிகழ்ச்சியில் மருத்துவர்கள், செவிலியர்கள் கலந்துகொண்டு பொதுமக்களுக்கு மருத்துவ சேவைகளை ஆற்றினார்கள்.

# இலக்கிய வாசிப்பே இன்று என்னை இயக்குநராக மாற்றியுள்ளளது தமிழ்த்துறை நிகழ்ச்சியில் இயக்குநர் வ.கீரா பேச்சு

சின்னாளபட்டி, ஜன .25-

காந்திகிராம கிராமிய நிகர்நிலைப் பல்கலைக்கழகத்தின் தமிழ்த்துறையில் 21.01.2026 அன்று சுப்ரபாரதிமணியன் அறக்கட்டளைச் சொற்பொழிவு நடைபெற்றது. பல்கலைக்கழகப் பதிவாளர் திரு.சுந்தரமாரி (பொ) தலைமை வகித்தார். எழுத்தாளர் தமிழ் மணவாளன் "இயக்குநர் வ.கீரா இலக்கியப் படைப்புகள்" என்னும் தலைப்பில் உரையாற்றினார். எழுத்தாளர் சுப்ரபாரதிமணியன், பச்சைநிறக் காத்து, எட்டுத்திக்கும் பற ஆகிய திரைப்படங்களின் இயக்குநர் வ.கீரா ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகப் பங்கேற்றனர். தமிழ்த்துறைத் தலைவரும் நிகழ்ச்சியின் ஒருங்கிணைப்பாளருமான



பேராசிரியர் பா.ஆனந்தகுமார் எழுத்தாளர் சுப்ரபாரதிமணியனின் படைப்புகளை மாணவர்களுக்கு அறிமுகப்படுத்தினார். "இந்தியாவில் மனிதர்களைச் சாதி, சமய பேதங்களின்றி ஒரே இடத்தில் ஒருங்கிணைக்கும் பணியை முதன்முதலில் ரயில் வண்டியும், சினிமா தியேட்டர்களும்தான் மேற்கொண்டன. சமூக மாற்றத்திற்குத் திரைத்துறையின் பங்கு முக்கியமானது" என்றார். அவரை அடுத்து பேசிய பல்கலைப் பதிவாளர் (பொ) சுந்தரமாரி தனது தலைமையுரையில் "ஒரு மொழியை அழிவுபடாமல் காப்பதற்கு அம்மொழி இலக்கியங்கள் தொடர்ந்து பயிலப்பட வேண்டும். எழுத்தாளர்களின் படைப்புகள் பல்வேறு கோணங்களிலும் ஆராயப்பட வேண்டும். இத்தகைய அறக்கட்டளைச் சொற்பொழிவுகள் பன்முக வாசிப்பை மாணவர்களுக்கு அறிமுகம் செய்கின்றன. மொழியுணர்வே ஒரு இனத்தை அழிவிலிருந்து காக்கும்" என்றார். சிறப்பு விருந்தினராக கலந்து கொண்ட எழுத்தாளர் தமிழ் மணவாளன் பேசும்போது "இயக்குநர் வ.கீராவின் படைப்புகள் யதார்த்தத்தைச் சித்திரிப்பவை. அவரது சிறுகதைகள் கிராமியச் சூழலைக் கண்முன் நிறுத்த வல்லவை. அவரது குமரி நாவல் வரலாறுக்கு முந்தைய தமிழ் இனத்தின் பதிவாக தனித்த பெருமையுடன் திகழ்கிறது" என்றார். மேலும், வ.கீராவின் முக்கியப் படைப்புகளான மோகினி சிறுகதைத் தொகுப்பு, பாரிஆட்டம் குறுநாவல் உள்ளிட்டவற்றையும் திறனாய்வு நோக்கில் எடுத்துரைத்தார். நுஜீறைவாக பேசிய இயக்குநர் வ.கீரா தனது "இலக்கிய வாசிப்பே இன்று என்னை இயக்குநராக மாற்றியுள்ளளது. சிறுவயதில் நூல்கள் சரிவர கிடைக்காத குக்கிராமத்தில் தினத்தந்தியின் கன்னித்தீவு கதையைத் தொடர்ந்து வாசித்துள்ளேன். மு.வ.வின் பெற்ற மனம் என்னைத் தமிழ் இலக்கிய வாசிப்பிற்குள் அழைத்துச்சென்றது. இலக்கிய வாசிப்பும் இரசனையும் எனக்குள்ளிருந்த திரையார்வத்தை மெருகேற்றியது" என்றார். அதன் பின்னர் தனது திரையனுவபவம் குறித்தும் மாணவர்களிடையே பகிர்ந்துகொண்டார். தமிழ்த்துறையின் முன்னாள் தலைவர் பேராசிரியர் அ.பிச்சை அவர்களின் நூல்கள் மாணவர்கள், மற்றும் ஆய்வாளர்களுக்குப் பரிசாக வழங்கப்பட்டன. நிறைவாக தமிழ்த்துறை இணைப்பேராசிரியர் சி.சிதம்பரம் நன்றியுரை வழங்கினார்.












■ மதுரை மாவட்டம், செயிண்ட் மேரிஸ் பள்ளியில் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறையின் நலன் காக்கும் ஸ்டாலின் பல்நோக்கு சிறப்பு மருத்துவ முகாமை மாவட்ட ஆட்சித்தலைவர் கே.ஜே.பிரவீன்குமார், பார்வையிட்டு மகப்பேறு பெண்களுக்கு ஊட்டசத்து பெட்டகம் மற்றும் மாற்றுத்திறனாளிகளுக்கு அடையாள அட்டைகளை வழங்கினார். தெற்கு சட்டமன்ற உறுப்பினர் பூமிநாதன், மாநகராட்சி துணைமேயர் நாகராஜன, ஆகியோர் உடன் உள்ளனர்.

# செங்கல்பட்டு, சேலம் உள்ளிட்ட 9 மாவட்டங்களில் நாளை கனமழைக்கு வாய்ப்பு

சென்னை, ஜன.25-

தமிழகத்தில் செங்கல்பட்டு உள்ளிட்ட 9 மாவட்டங்களில் கனமழை பெய்ய வாய்ப்புள்ளது.

இது தொடர்பாக சென்னை வானிலை ஆய்வு மையம் வெளியிட்ட செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது: தமிழகம், இலங்கை கடலோரப் பகுதிகளுக்கு அப்பால் உள்ள தென்மேற்கு வங்கக்கடல் பகுதிகளின் மேல், தமிழகம் நோக்கி நகரும் கிழக்கு திசை வளிமண்டல அலை நிலவுகிறது.



இதன் காரணமாக தமிழகத்தில் நாளையும் (ஜன.25) நாளை மறுதினமும் ஒருசில இடங்களில் இடி, மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும். 27 முதல் 30ம் தேதி வரை தமிழகத்தில் வறண்ட வானிலை நிலவக்கூடும்.

தமிழகத்தில் நாளை செங்கல்பட்டு, திருவண்ணாமலை, சேலம், நாமக்கல், கள்ளக்குறிச்சி, விழுப்புரம், கடலூர், தஞ்சாவூர், ராமநாதபுரம் மாவட்டங்களில் ஓரிரு இடங்களிலும், புதுச்சேரியிலும் கனமழை பெய்யக்கூடும்.

சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் நாளை வானம் பொதுவாக மேகமூட்டத்துடன் காணப்படும். நகரின் ஒருசில பகுதிகளில் இடி, மின்னலுடன் கூடிய மிதமான மழை பெய்யக்கூடும்.

தமிழகத்தில் இன்று காலை 8.30 மணியுடன் நிறைவடைந்த 24 மணி நேரத்தில் சென்னை மேடவாக்கம், மாதவரம், பெரம்பூர், மணலி, அடையார், பெருங்குடி, தண்டையார்பேட்டை, மயிலாப்பூர், வேளச்சேரி, அமைந்தகரை, நுங்கம்பாக்கம், அயனாவரம், பள்ளிக்கரணை, செங்கல்பட்டு மாவட்டம் மாமல்லபுரம் ஆகிய இடங்களில் தலா 1 செமீ மழை பதிவாகியுள்ளது.

SAKKRA VIYUGAM owned and published by PAL PANDIAN, printed at SHANLAX PRESS 66, VP COMPLEX, TPK MAIN ROAD, VASANTHA NAGAR, MADURAI-625003,
Published at 70/53 A1, THILAGAR NAGAR 1ST STREET, ANUPPARPALAYAM, TIRUPPUR, TAMIL NADU-641652 Editor: PAL PANDIAN Phone : 88705 00000